09.03.2026 O.S.311/2022 பி.வா.சா 1 இந்துமதி ஜோதி

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்குவிசாரணை

வாதி ராணி என் தாயார் என்றால் சரிதான். என் தாயார் எதற்காக வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் என் தாயாரை பராமரிக்கவில்லை என்றும், அவரை ஏமாற்றி சொத்தை எழுதி வாங்கிவிட்டதாக கூறி வழக்கு தாக்கல் செய்துள்ளார். எத்தனை சொத்துக்களுக்கு வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் வீடு, கிணறு அமைந்த இடம் ஆகியவற்றிக்கு வழக்கு தாக்கல் செய்துள்ளார். சொத்து யாருக்கு பாத்தியப்பட்டது என்றால் என் அப்பாவிற்கு பாத்தியப்பட்டது. என் அப்பாவிற்கு எப்படி கிடைத்தது என்றால் என் அப்பாவின் அப்பாவிற்கு பாத்தியப்பட்டதாகும். என் அப்பாவின் அப்பா பெயர் சண்முகம் ஆகும். சண்முகத்திற்கு என் அப்பா மற்றும் என் அப்பாவுடன் பிறந்த ஒரு அண்ணன், இரண்டு சகோதரிகள் வாரிசுகள் ஆகும். என் தாத்தா உயிருடன் இருக்கும்போதே சொத்துக்களை பாகம் பிரித்து கொண்டார்கள். சொத்தை பாகம் பிரிக்கும் போது என் அத்தைமார்கள் வரவில்லை என்றால் சரியல்ல. என் அத்தைமார்களும் சேர்ந்து தான் பாகம் பிரித்து கொள்ளப்பட்டது. அவ்வாறு பாகம் பிரித்ததில் யார் யாருக்கு என்ன பாகம் கிடைத்தது என்றால் என் அப்பாவிற்கும், என் பெரியப்பாவிற்கும் மட்டுமே சொத்து கிடைத்தது. எவ்வளவு சொத்து கிடைத்தது என தெரியாது. அனைவரும் சேர்ந்து விவசாயம் செய்தார்கள். அவ்வாறு என் தாத்தா உயிருடன் இருந்தபோதே பாகம் பிரித்து கொண்டதற்கான ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. 1ம்லக்க சொத்து வீட்டில்என் அத்தைமார்களுக்கு வீடு இல்லை என்றால் சரிதான். எதற்காக அவர்களுக்கு பாகம் கொடுக்கவில்லை என்றால் நகை கொடுத்து

திருமணம் செய்து கொடுத்தால் பாகம் கொடுக்கவில்லை. என் அத்தைமார்களை நீதிமன்றத்தில் விசாரித்தால் இதுபற்றி சொல்லுவார்களா என்றால் சொல்வார்கள். என் அத்தைமார்கள் 2ம்லக்க சொத்தை பொறுத்து என் பெரியப்பா வெள்ளத்துரைக்கு பாக விடுதலை ஆவணம் எழுதி கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். என் அப்பா 2001ம் ஆண்டு இறந்து விட்டார். அப்போது எனக்கு 4 வயது இருக்கும். நான் எம்.எஸ்.சி. வரை படித்துள்ளேன். என் அம்மா தான் என்னை படிக்க வைத்தார். என் அம்மாவிற்கு என்ன வருமானம் என்றால் விவசாயம் செய்து வந்தார். தற்போது பெட்ரோல் பல்கில் வேலை செய்து வருகிறார். என்னை படிக்க வைப்பதற்கு என் அப்பா பணம் எதுவும் சேர்த்து வைக்கவில்லை என்றால் சரிதான். என்னை படிக்க வைத்ததற்கு என் அம்மா கடன் வாங்கி தான் படிக்க வைத்தார் என்றால் சரிதான். எனக்கு 2020ம் ஆண்டு திருமணம் நடைபெற்றது. என் திருமணத்தை எனது தாயார் தான் நடத்தி வைத்தார் என்றால் சரிதான். திருமண ஏற்பாட்டை யார் செய்தது என்றால் என் கணவர் தான் வீட்டில் தான் திருமண செலவு செய்தார்கள். என் தாயார் செய்யவில்லை. திருமணத்தின் போது எனது தாயார் சீர்வரிசையாக நகை கொடுத்தாரா என்றால் இல்லை. எனக்கு தங்க நகை எதுவும் திருமணத்தின் போது எனது தாயார் எதுவும் கொடுக்கவில்லை. சீர்வரிசை பொருட்களை என் தாயார் வாங்கி கொடுத்தார் என்றால் என் தாயாரின் சகோதரி வாங்கி கொடுத்தார். 2015ம் ஆண்டு எனக்கு என்ன வயது என்றால் 24 வயது இருக்கும். 2015ம் ஆண்டு என் அம்மா வீட்டை எனது பெயருக்கு எழுதி வைப்பதற்கு என்ன காரணம் என்றால் நான் அவரை நல்லமுறையாக பார்த்துகொள்வேன் என்ற எண்ணத்தில் பார்த்து கொள்வேன் என எழுதி வைத்தார். திருமணத்திற்கு பிறகு எனது தாயாரை

நான் பார்த்தது இல்லை என்றால் சரியல்ல. நான் பார்க்க சென்றேன். நான் திருமணத்திற்கு பிறகு எனது அம்மாவிற்கு ஒரு போன் கூட செய்ததது கிடையாது என்றால் இல்லை. போன் செய்தேன் அவர் எடுக்கவில்லை. என் தாயாருக்கும், எனக்கும் என்ன பிரச்சனை என்றால் என் தாயாருடன் இருக்க வேண்டும் என கேட்கிறார். என் தாயார் என் பெயரில் மாறாந்தை தபால் அலுவலகத்தில் பணம் செலுத்தியுள்ளார் என்றால் சரிதான். அந்த தொகையை எடுப்பதற்கு என் தாயார் கேட்டபோது நான் செல்லவில்லை என்றால் என் மகனுக்கு உடல்நிலை சரியில்லாததால்போகவில்லை. தற்போது அந்த பணத்தை எடுத்து கொடுக்க ஆட்சேபனை இல்லை என்றால் சரிதான். என் தாயார் கடன் பெற்று இருசக்கர வாகனம் வாங்கி கொடுத்தார்ல என்றால் சரியல்ல. மானியத்தில் வாங்கப்பட்டது. மானியம் ரூ.25 ஆயிரம் கொடுக்கப்பட்டது. மீதிதொகை ரூ.75 ஆயிரம் கடனாக கொடுத்து வாங்கப்பட்டது. அந்த ரூ.75 ஆயிரமும் என் தாயார் கொடுத்த பணம் என்றால் சரிதான். இருசக்கர வாகனம் வாங்குவதற்கு லோன் வாங்கியுள்ளேன் என்றால் இல்லை. இருசக்கர வாகனத்தை காண்பித்து எனது தாயார் கடன் வாங்கியுள்ளாரா என்றால் இல்லை. அந்த இருசக்கர வாகனம் எங்குள்ளது என்றால் எனது தாயார் யாருக்கோ விற்பனை செய்துவிட்டார். வழக்கு 2 ம்லக்க அட்டவணை சொத்தை பொறுத்து என் அம்மாவிற்கு தெரியாமல் என் அத்தைமார்களிடம் இருந்து பாகவிடுதலை பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல. என் அம்மாவிற்கு தெரியும். என் தாயாருக்கு என் அத்தைகள் பாகவிடுதலை அழைத்தால் எழுதி கொடுப்பார்கள். நான் சொத்து முழுவதையும் எழுதி வாங்கிய பிறகு எவ்வாறு என் அம்மாவிற்கு எப்படி எழுதி கொடுக்க முடியும் என்றால் தெரியவில்லை. 2015 ம் ஆண்டு எனதுதாயாரை ஏமாற்றி சொத்துக்களை

எழுதி வாங்கி விட்டேன் என்றால் சரியல்ல. 2022ம் ஆண்டில் எனது தாயாரை ஏமாற்றும் விதமாக என் அத்தைகளிடம் பாகவிடுதலை எழுதி வாங்கியுள்ளேன் என்றால் சரியல்ல. என் அம்மாவிற்குரிய பங்கை கொடுப்பதற்கு எனக்கு ஆட்சேபனை இல்லை என்றால் சரிதான். நான் அந்த வீட்டை அனுபவிக்கவில்லை என்றால் சரிதான். என் தாயார் தான் அனுபவம் செய்து வருகிறார். இடத்தை என் தாயார் தான் அனுபவித்து வருகிறார். என் தாயாரை பராமரிக்காத காரணத்தினாலும், அவரை ஏமாற்றும் விதமாக சொத்துக்களை நான் ஏமாற்றி எழுதி வாங்கி கொண்டேன் என்றால் சரியல்ல. தபால் நிலையத்தில் உள்ள தொகையை என் அம்மாவிற்கு எடுத்து கொடுப்பதற்கு மனம் இல்லாமல் இருந்து வருகிறேன் என்றால் சரியல்ல. என் அப்பாவின் சொத்தில் என் அம்மாவிற்கு பாகம் உள்ளது என்றால் உள்ளது.

(ஒம்)எஸ்.முருகவேல்,
கூடுதல் சார்பு நீதிபதி,
தென்காசி.